**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE SPECIAL COURT FOR TRIAL OF CASES**

**UNDER SC/ST (POA) ACT, THENI.**

Spl.SC.No.40/2023

வழக்கு சாட்சி : PW2 (LW2 )

Date: 04.08.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வீரன் | தாலுகா | : | போடி |
| த/பெயர் | : | சின்னன் | தொழில் | : | கொத்தனார் |
| கிராமம் | : | டொம்புச்சேரி | வயது | : | 43 |

4ம் எதிரி ஆஜர் இல்லை. U/s 355 BNSS பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கபட்டது. 1, 9 எதிரிகள் இறந்து விட்டார்கள். மற்ற எதிரிகள் ஆஜர்.

---

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை –**

நான் தற்போது டொம்புச்சேரியில் குடியிருந்து கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். நான் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் தேவர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 04.11.2021ம் தேதி மாலை 6 மணியளவில் பட்டாளம்மன் கோவில் அருகில் உள்ள பாலத்தில் நானும் கலைக்கண்ணனும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு வந்து சக்கிலிய் கூதி மகன்களா நீங்களெல்லாம் கார் பைக் வைத்திருந்தால் எங்களுக்கு இழிவான வேலை பார்ப்பது யார் என்று சொன்னார்கள். உடனே அசா–1 ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டார். அசா–1 அவ்வாறு தட்டி கேட்டபோது அவரை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். அப்போது அர்ஜுன் என்ற நபர் நான் மிலிட்டரிகாரன்டா அருவாளை எடுத்துவந்து உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று சொல்லி அருவாளை எடுத்து வந்து அசா–1 ஐ தலையில் வலது பக்கத்தில் வெட்டிவிட்டார். அவரை வெட்டும்போது நான் வந்து தடுத்தேன். அவ்வாறு தடுத்தபோது எனது வலதுகை கட்டைவிரலில் எனக்கு இரத்தகாயம் ஏற்பட்டது. நாகராஜ் என்பவரின் கார், பைக், வீட்டை அடித்து நொறுக்கிவிட்டார்கள். அதன்பிறகு நானும்அசா–1ம் டொம்புச்சேரியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை எடுத்துவிட்டு க.விலக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம்.

சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள்  தரப்பு குறுக்கு விசாரணை –**

(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முதல் விசாரணையின்போது ஆஜராகி இருந்தும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறியதன்பேரில் எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு. அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR
Digitally signed by SANKAR
Date: 2026.08.05 11:58:16 +0530

அமர்வு நீதிபதி
சிறப்பு நீதிமன்றம் (மு,கூ,பொ)
(பட்டியலினத்தோர் மற்றும் பழங்குடியினர்
வன்கொடுமை தடுப்பு சிறப்பு நீதிமன்றம்)
தேனி.